



# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






ஞாயிறு ❖ ஜீன். 18, 2023 புதுக்கோட்டை 8 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 254 ❖ ரூ.10




# இன்று

# 18-6-2023

உடல் வலி அசதி தீர முருங்கை கஷாயம் சாப்பிடவும்
சக வருடம் 1945 ஜ்யேஷ்டம் 28

சோபகிருது ஆனி 3 | JUN - SUN ஞாயிறு | துல்கஃதா 28 | வளர்பிறை 169 / 196

அமாவாசை 11.13 (கா. 10.24) மிருகசீருஷம் 31.43 (மா. 06.35) தியாஜ் 54.28 அகஸ் 31.30 சித்த. சிதம்பரம், ஆவுடையார் கோவில் இத்தலங்களில் சிவ பெருமான் பவனி. திருவள்ளூர் வீரராகவர் தெப்போற்சவம். சூரிய வழிபாடு, ஆரோக்கிய ஸ்நானம் செய்ய நன்று.


| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.30-7.30 | 10.30-11.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்
மிதுன லக்னம் இருப்பு நா. 4 வி. 55
சந்திராஷ்டமம் விசாகம் அனுஷம்
கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 5.54

அரசன் அன்றே செய்வான், தெய்வம் நின்று செய்யும்.

இராசிபலன்
மேஷம் - லாபம்
ரிஷபம் - வெற்றி
மிதுனம் - நலம்
கடகம் - நட்பு
சிம்மம் - யோகம்
கன்னி - சிரமம்
துலாம் - தேர்ச்சி
விருச்சி - பாராட்டு
தனுசு - ஆதரவு
மகரம் - சாந்தம்
கும்பம் - செலவு
மீனம் - சாதனை

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# 11 ஆண்டுகளாக தொடர்ச்சியாக 10ம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி மதியநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு பாராட்டு



அன்னவாசல் , ஜூன்.18-

11 ஆண்டுகளாக தொடர்ச்சியாக 10ம் வகுப்புத் தேர்வில் 100% தேர்ச்சி பெறும் மதியநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம், மதியநல்லூர் அரசு உயர் நிலைப்பள்ளி கடந்த 11 ஆண்டுகளாக தொடர்ச்சியாக 10 ஆம் வகுப்பு தேர்வில் 100% தேர்ச்சியைப் பெற்று வருகிறது. அதற்குக் காரணமான, அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்களையும், முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளையும் புதுக்கோட்டை "வாசகர் பேரவை" பாராட்டி பெருமைப்படுத்தியது. இந்நிகழ்விற்கு பள்ளித் தலைமை ஆசிரியர் அ. தர்மசேகர் தலைமை வகித்தார். வாசகர் பேரவைச் செயலர் சா.விஸ்வநாதன் அறிமுக உரையாற்றினார்.

வாசகர் பேரவை உறுப்பினர்கள் சத்திய ராம் மு.ராமுக்கண்ணு, ரோட்டரி மேனாள் ஆளுனர் அ.லெ. சொக்கலிங்கம், மரம் நண்பர்களின் செயலர் பழனியப்பா கண்ணன் ஆகியோர் ஆசிரியர்களையும் அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகளையும் பாராட்டிப் பேசினர். இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் அ.தர்மசேகர், உதவி தலைமை ஆசிரியர் க.பாலசந்திரன், கணித ஆசிரியர்கள் ச.குமார், இரா. பிரபா, அறிவியல் ஆசிரியர் அ.அருள், ஆங்கில ஆசிரியர் பா.ஆ.செ. மர் ஃபி, சமூக அறிவியல் ஆசிரியர் பு.இராமமூர்த்தி, தமிழ் ஆசிரியர் இரா.பழனிவேல் ஆகியோருக்கு சால்வை அணிவித்து நினைவுப் பரிசாக புத்தகமும் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

அதே போல் 10ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகள்- 500க்கு 464 மதிப்பெண் பெற்ற ச.சங்கீதா, 432 மதிப்பெண் பெற்ற இரா.சரண்யா,431 மதிப்பெண் பா.மதுமிதா - ஆகியோருக்கும் சால்வை அணிவித்து, நினைவுப் பரிசாக மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை'வழங்கப்பட்டது. அதோடு இம்முவருக்கும் புதுக்கோட்டை மரம் நண்பர்கள் சார்பில் தலா 500 ரூபாய்பரிசாக அவ்வமைப்பின் செயலர் கண்ணன் வழங்கினார். மேலும் கடந்த ஆண்டு மாநில, மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கும் சால்வை அணிவித்து நூல்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. மற்றும் பள்ளிக்கு வருகை புரிந்த அனைத்து (170) மாணவ, மாணவிகளுக்கும், புதியகல்வியாண்டை வரவேற்கும் வகையில் அப்துல்கலாம் உரைகள் அடங்கிய நூல்கள் அன்புப் பரிசாக வழங்கப்பட்டது.

முன்னதாக பள்ளித் தலைமையாசிரியர் அனைவரையும் வரவேற்றார். நிறைவாக உதவித் தலைமை ஆசிரியர் க.பாலசந்திரன் நன்றி கூறினார்.

# பரசலூரில் ஏழை மக்களுக்கு இலவச குளிர்சாதனப்பெட்டி வழங்கல்



மயிலாடுதுறை, ஜூன்.18-

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் அருகேயுள்ள பரசலூரில் வீரபாண்டிய கட்டபொம்மன் மக்கள் பொதுநல மன்றம் சார்பில் இலவச குளிர்சாதன சவப்பெட்டி அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி மன்றத்தின் நிறுவன தலைவரும், முன்னாள் மாவட்ட கவுன்சிலரும், தொழிலதிபருமான மாயா வெங்கடேசன் தலைமையில் நடைப்பெற்றது.

பரசலூர், செம்பனார்கோவில், சாத்தனூர், கீழ்மாத்தூர், மேமாத்தூர், கூடலூர், கீழையூர், பனங்குடி, திருவிளையாட்டம், ஈச்சங்குடி, கடலி, ஆறுபாதி, மேலப்பாதி உள்ளிட்ட 20 -க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த ஏழை, எளிய மக்களின் குடும்பங்களில் ஏற்படுகிற இறப்புகளின் போது கட்டணமின்றி பயன்படுத்திக்கொள்ளும் வகையில் நவீன குளிர்சாதனப்பெட்டி பல லட்சம் மதிப்பீட்டில் வடிவமைக்கப்பட்டு அதனை மக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சிக்கு அனைத்து பத்திரிகை ஊடக செய்தியாளர்கள் மற்றும் சுற்றுவட்டார கிராம நட்டாண்மை, பஞ்சாயத்தார்கள், கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலை வகித்தனர்.

மன்றத்தின் மாநில பொது செயலாளர் த.சரவணக்குமார் வரவேற்று பேசினார். பரசலூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஹிட்லர், திமுக மூத்த பேச்சாளர் பரசலூர் கந்தசாமி, மூத்த செய்தியாளர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் வாழ்த்தி உரையாற்றினர். தொடர்ந்து குளிர்சாதன சவப்பெட்டியினை அர்ப்பணித்து மாயாவெங்கடேசன் உரையாற்றினார். நிறைவாக கீழையூர் ஜோதிபாசு நன்றி கூறினார்.






மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி கடற்கரை ஓரம் அமைந்துள்ள நியூமரான் ஹோட்டலில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் தரங்கம்பாடி தாலுகாவில் இறால் வளர்ப்பு பண்ணை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு தாட்கோ கழகத் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாட்கோ மேலாண்மை இயக்குனர் கே.எஸ்.கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுண சங்கரி குமரவேல், தாட்கோ மேலாளர் சுகந்தி, உதவி இயக்குனர் ராஜேஷ் குமார், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலகண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீரபாண்டியன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# புகழ் வணக்க நிகழ்வு



காரைக்கால், ஜூன்.18-

தமிழகத்தில் பிறந்த பட்டியல் சமூகத்தின் பேராளுமையும் பேராற்றலும் கொண்ட சர் ராவ் பகதூர் எம். சி ராஜாவின் 140 வது பிறந்த நாளையொட்டி காரைக்கால் முல்லை நகர் பகுதியில் புகழ் வணக்க நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு காரைக்கால் தலித் சேனா இயக்கத் தலைவர் ,சுப்ரமணியன் தலைமையேற்க தமிழ்த் தேசிய பேரியக்க காரைக்கால் தலைவர் ஜெயபால், அரசு ஊழியர் சங்க சம்மேளன பொறுப்பாளர் கதிர். அய்யப்பன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ,சூர்யா மற்றும் கலை மாமணி ரஜினி சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்க, சிறப்பு அழைப்பாளராக காரைக்கால் சின்ன கோவில் பத்து பகுதியை சேர்ந்த மாரிமுத்து கலந்து கொண்டு எம்.சி.ராஜாவுக்கு புகழ் வணக்கம் செலுத்தி சிறப்புரையாற்றினர்.

முன்னதாக முல்லை நகர் பகுதியை சேர்ந்த சாக்கியா இளங்கோவன் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க செல்வக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார் இறுதியாக ஆகாஷ் அனைவருக்கும் நன்றி கூறினார்...

# செம்பனார்கோவில் ஒன்றியத்தில் ரூ.15 லட்சம் செலவில் இரண்டு புதிய மின் மாற்றிகள் துவக்க விழா



*தரங்கம்பாடி, ஜுன்-18*

*மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, காட்டுச்சேரி, எடுத்துக்கட்டி சாத்தனூர் ஆகிய ஊராட்சிகளில் புதிய மின் மாற்றிகள் துவக்க விழா மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் திறந்து வைத்தனர்.*

*விழாவிற்கு மின்வாரிய செயற்பொறியாளர் கே.விஸ்வநாதன், செம்பனார்கோவில் ஒன்றிய குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர், மாவட்ட திமுகதுணை செயலாளர் ஞானவேலன், செம்பை தெற்குஒன்றியச்செயலாளர் எம்.அப்துல் மாலிக், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம். சித்திக், மின்வாரிய உதவி செயற்பொறியாளர் அப்துல் வஹாப் மரைக்காயர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இதில் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் கலந்து கொண்டு காட்டுச்சேரி ஊராட்சி காராம்பள்ளம், எடுத்துக்காட்டி சாத்தனூர் ஊராட்சி பள்ளிவாசல் பகுதியில் ரூ.15 லட்சம் செலவில் இரண்டு புதிய மின்மாற்றிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்து பேசினர்.*

*இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு துணை தலைவர் பாஸ்கர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் எஸ். விஜயலட்சுமி சாமிநாதன், பைலட், உதவி மின் பொறியாளர் எஸ். அன்பு செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

# காரைக்கால் மாவட்டம் பொன்பேத்தி வருவாய் கிராமத்தில் சாலை அமைக்கும் பணி கலெக்டர் ஆய்வு



காரைக்கால் , ஜூன்.18-

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து பொன்பேத்தி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட அண்டூர் முதல் ஆத்தங்கரை வரை சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலேர்த்துங்கன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பேட்கோ மூலம் ரூ.33 இலட்சம் செலவில் அமைக்கப்படும் இப்பணியினை விரைவில் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விடும்படி ஆட்சியர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

மேலும் பேட்கோ மூலம் பணி முடித்த பருத்திக்குடி சாலையையும் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் வட்டார வளர்ச்சி துறை மூலம் பொன்பேத்தியில் நடைபெறும் 100 நாள் வேலை பணிகளையும் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அதிகாரி சச்சிதானந்தம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பாலன், வட்டாட்சியர் பொய்யாத மூர்த்தி பேட்கோ நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# நெடுங்காடு கொம்யூன் மேலகாசாகுடியில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு புதிய வகுப்பறைகள்



காரைக்கால் , ஜூன்.18-

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் மேலகாசாகுடி கிராமத்தில் அமைந்துள்ள அரசு நடுநிலைப்பள்ளி சென்ற வருடம் இரண்டு புதிய வகுப்பறைகள் பொதுப்பணி துறையால் ரூ.29 லட்சம் மதிப்பீட்டில் பணி நடைப்பெற்றது. இரண்டு பழைய சிதலமடைந்த வகுப்பறைகளையும் மற்றும் பல்வேறு பணிகளையும் செய்து முடிக்கப்பட்டு நேற்று இப்பள்ளியினை மாணவர்கள் பயன்பாட்டிற்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா திறந்து வைத்தார். மேலும் பள்ளியில் படிக்கும் 103 மாணவ, மாணவிகளுக்கு இலவச சீருடை மற்றும் தையல் கூலி மேலும் இலவச நோட்டு புத்தகம் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் பள்ளி தலைமை ஆசிரியர். பரமசிவம் மற்றும் ஆசிரியர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# ஆயப்பாடியில் சமூக நல அறக்கட்டளை சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு



*தரங்கம்பாடி, ஜுன்-18;*

*மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, திருக்களாச்சேரி ஊராட்சி ஆயப்பாடி கடைவீதியில் சமூக நல அறக்கட்டளை சார்பில் கோடை வெயிலின் தாக்கம் காரணமாக பொதுமக்களின் நலனுக்காக குளிர் பானம் மற்றும் நீர் மோர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி ,ஹாஜி.இ.எம்.எம். நஜீர் அஹமது தலைமையில் நடைபெற்றது.*

*திருக்களாச்சேரி ஊராட்சிமன்றமுன்னாள் தலைவர் அஜீஸ், சமூக நலசெயல்பாட்டாளரும், அறக்கட்டளை அறங்காவலருமான ஆயப்பாடி முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இதில் சிறப்பு அழைப்பாளராக, செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல் எம். மாலிக் கலந்துகொண்டு பொதுமக்கள், பள்ளி மாணவர்களுக்கு குளிர் பானம், நீர்மோர் வழங்கி துவக்கி வைத்தார் இதில், அறக்கட்டளையின் செயலாளர் மணிகண்டன், எம். ஜாகீர் உசேன் மற்றும் ஜமாத்தார்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முடிவில் அறக்கட்டளை துணைச் செயலாளர் முஹம்மது ஆசிக் நன்றி கூறினார்.*



மதுரை திருமங்கலத்தில் அமைந்துள்ள தியாகி எஸ். எஸ். விஸ்வநாததாஸ் நினைவு இல்லத்தில் அவரது 137 வது பிறந்தநாளை முன்னிட்டு, அவர் முத்தமிழ் தேசிய கவிஞர் மதுர பாஸ்கரதாஸ் எழுதிய பல தேசிய பாடல்களை தான் நடித்த நாடகங்களில் இசையமைத்தபடி சுதந்திர வேட்கையை மக்களிடையே, விஸ்வநாததாஸ் தட்டி எழுப்பினார். இவர் இல்லத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, தமிழ்நாடு அரசு சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், உடன் தாசில்தார் சிவராம், நகராட்சித் தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான், மருத்துவ சங்கச் செயலாளர் சுப்ரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பொள்ளாச்சி – வால்பாறை சாலையில் வன ஊழியரை தாக்க வந்த காட்டு யானையால் பரபரப்பு



பொள்ளாச்சி, ஜூன்.18-

ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதியிலுள்ள வன விலங்குகள், தண்ணீர் தேடி ஆழியாறு அணை மற்றும் வால்பாறை, நவமலை உள்ளிட்ட சாலை பகுதிகளில் சுற்றித் திரிகின்றன. குறிப்பாக, யானைகள் குட்டிகளுடன் கூட்டம், கூட்டமாக சாலையோரங்களில் சுற்றித் திரிவதால் வால்பாறை செல்லும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி, வனத்துறை ஊழியர்கள் சுழற்சி முறையில் அப்பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வனப்பகுதியில் இருந்து வெளியேறும் விலங்குகளை மீண்டும் வனப்பகுதிக்குள் விரட்டும் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், நவமலை செல்லும் சாலையில் சுற்றித்திரிந்த யானை கூட்டத்தை, அப்பகுதியில் ரோந்து பணியில் இருந்த வனத்துறை ஊழியர்கள் மற்றும் வேட்டைத்தடுப்பு காவலர்கள் வனப்பகுதிக்குள் விரட்ட முயற்சித்தனர். அப்போது, கூட்டத்தில் இருந்து பிரிந்து வந்த யானை ஒன்று, மிகுந்த ஆக்ரோஷத்துடன் பிளிறியபடி ஜோனி எனும் வனத்துறை ஊழியரை தாக்க வந்தது. பின்னர் திரும்பி வனத்துக்குள் சென்றது. தற்போது வனப்பகுதிக்குள் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் இல்லாததால், விலங்குகள் தொடர்ந்து வெளியேறி வருகின்றன.

இதையடுத்து, பொள்ளாச்சி வனச்சரகர் புகழேந்தி தலைமையிலான வனத்துறையினர், வேட்டைதடுப்பு காவலர்கள் சுழற்சி முறையில் ரோந்து பணியில் ஈடுபட்டு, வனப்பகுதியை விட்டு விலங்குகள் வெளியேறாமல் இருக்கும் வகையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மனதிற்கு எதோ பெரிய பொறுப்புணர்ச்சி வந்ததைப்போல் உணர்கிறேன்

# அச்சாரம்

## அம்பேத்கர், பெரியார், காமராஜரை பற்றி தெரிந்துகொள்ளுங்கள். நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள் மற்றதை விட்டுவிடுங்கள்:மாணவர்கள் மத்தியில் நடிகர் விஜய் பேச்சு

சென்னை, ஜூன்.18-

அகில இந்திய விஜய் மக்கள் இயக்கம் சார்பில் தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ, மாணவியருக்கு சான்றிதழ், ஊக்கப்பரிவு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது, விழாவில் நடிகர் விஜய் பேசியதாவது:- நான் நிறைய இதுபோன்ற ஆடியோ நிகழ்ச்சிகள், விருது நிகழ்ச்சிகளில் எல்லாம் பேசியுள்ளேன். ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சியில் பேசியது இது தான் முதல் முறை. மனதிற்கு எதோ பெரிய பொறுப்புணர்ச்சி வந்ததைப்போல் உணர்கிறேன்.

நான் நடிகன் ஆகவில்லை என்றால் டாக்டராகியிருப்பேன் என்று கூற விரும்பவில்லை. என் கனவு எல்லாம் சினிமா, நடிப்பு தான் அதை நோக்கியே என் பயணம் போய் கொண்டிருந்தது. இந்த விழா நடத்துவதற்கான காரணம் ஒரு திரைப்படத்தில் வரும் வசனம் உன்னிடம் இருந்து சொத்து, நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். கல்வியை உன்னிடம் இருந்து யாரும் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொன்னார். முடிந்தவரை படியுங்கள் எல்லோரையும் பற்றி தெரிந்துகொள்ளுங்கள் எல்லா தலைவர்கள் பற்றி தெரிந்துகொள்ளுங்கள். அம்பேத்கர், பெரியார், காமராஜரை பற்றி தெரிந்துகொள்ளுங்கள். நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள் மற்றதை விட்டுவிடுங்கள். நாளைய வாக்காளர்கள் நீங்கள் அடுத்தடுத்து நீங்கள் புதிய வருங்கால தலைவர்களை தேர்தெடுப்பவர்கள் நீங்கள் தான். நம் விரலை வைத்து நம் கண்ணை குத்துவது பற்றி கேள்விபட்டுள்ளீர்களா? அது தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

அது தான் நாமும் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். பணம்வாங்கிக்கொண்டு வாக்களிப்பது. உதாரணமாக ஒரு வாக்கிற்கு 1000 ரூபாய் என்று வைத்துக்கொள்ளுங்கள் ஒரு தொகுதியில் 1 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு கொடுக்கிறார்கள் என்றால் 15 கோடி ரூபாய் ஆகிறது. ஒருவர் 15 கோடி ரூபாய் செலவு செய்கிறார் என்றால் அவர் அதற்கு முன் எவ்வளவு சம்பாதித்து இருக்க வேண்டும். யோசித்து பாருங்கள். இதெல்லாம் பள்ளிகளில் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். நீங்கள் தான் அடுத்தடுத்த ஆண்டுகளில் முதல் முறை வாக்காளர்களாக வர உள்ளீர்கள். இது நடக்கும் போது தான் உங்கள் கல்வி முறை முழுமை அடைந்ததாக எடுத்துக் கொள்ளலாம் என கூறினார்.



### ஆசை யாரை விட்டது?

விஜய் நடிப்பில் உருவாகி வரும் 'லியோ' படத்தின் அப்டேட் குறித்த அறிவிப்பு வெள்ளிகிழமை வெளியாகி இருந்தது. அதில் 'Naa Ready' என சிங்கிள் பாடல் குறித்து சொல்லப்பட்டது. இந்நிலையில், நேற்று மக்கள் இயக்க நிகழ்வில் நடிகர் விஜய் பங்கேற்றுள்ளார். இது இரண்டையும் வைத்து பார்க்கும் போது குறிப்பால் தனது அரசியல் வருகையை விஜய் வெளிப்படுத்துகிறார் என்ற கருத்தை எழச் செய்கிறது. அதற்கு அறிகுறியாக நடிகர் விஜய் 3 விஷயங்களை செய்துள்ளார். ஒன்று அம்பேத்கர் பிறந்தநாள் அன்று 234 தொகுதிகளிலும் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உத்தரவிட்டார். அது போல் உலக பட்டினி தினத்தன்று 234 தொகுதிகளிலும் மதிய உணவு வழங்குமாறு தெரிவித்திருந்தார். அது போல் 10, பிளஸ் 2 தேர்வுகளில் தொகுதிவாரியாக முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை சந்தித்து அவர்களுக்கு நிதியுதவியும் பாராட்டுச் சான்றிதழையும் வழங்கி பேசி உள்ளார்.

## புதுக்கோட்டை இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் செல்லப்பிள்ளை திட்டம் குறித்து கலெக்டர் நேரில் ஆய்வு

புதுக்கோட்டை, ஜூன்.18-

புதுக்கோட்டை இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில், செல்லப்பிள்ளை திட்டம்குறித்து,மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மேலும் மருத்துவமனையில் சிகிச்சைபெறுபவர்களை நலம் விசாரித்து சிகிச்சை விபரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தார், செல்லப்பிள்ளை பச்சிளம் குழந்தை பராமரிப்பு ஆலோசனை மையம், பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் பிறப்பு சிறப்பு பராமரிப்பு பிரிவு, ஸ்கேன் மையம் ஆகியவற்றின் பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்தகுழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் மூலமாக பிரசவித்த தாய்மார்களுக்கு தாய்ப்பாலின் அவசியம், தாய்ப்பால் கொடுக்கும் முறை, சீம்பாலின் முக்கியத்துவம், பச்சிளம் குழந்தை பராமாரிப்பு, பாலூட்டும் தாய்மார்களுக்கான உணவு, சரியான குழந்தை வளர்ப்பு திறனை மேம்படுத்துதல் போன்ற ஆலோசனைகள் அளித்தல் மற்றும் சிகிச்சை பெற்று திரும்பும் குழந்தைகளின் தாய்மார்களுக்கு குழந்தைகள் பராமாரிப்பு குறித்து ஆலோசனை அளித்தல் மற்றும் வீடுகள் பார்வை மூலம் தொடர் கவனிப்பு அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள 'செல்லப்பிள்ளை" எனும் ஆலோசனை மையம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் தொடங்கப்பட்டது.

தற்போது வரை 135 வேலைநாட்களில், 4,276 பச்சிளம் குழந்தைகளின் தாய்மார்களுக்கு செல்லப்பிள்ளை திட்டம் மூலமாக குழந்தை பராமரிப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இங்கு பாலூட்டும் தாய்மார்களுக்கு சத்தான இணை உணவு கொழுக்கட்டைகள் மற்றும் ஊட்டச்சத்து மிக்கஉணவுபொருட்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளரச்சிப் பணிகள்திட்டம்மூலமாக வழங்கப்படுகிறது என மாவட்டஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் புவனேஸ்வரி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருக்கை மருத்துவர் இந்திராணி, கண்காணிப்பாளர் (பொ) மரு. ராஜ்மோகன், வட்டாட்சியர் விஜயலெட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



# பெருவாயல் டி.ஜே.எஸ்.மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் முப்பெரும் விழா: பட்டிமன்ற பேச்சாளர் அருள்பிரகாஷ் பங்கேற்பு

ஊத்துக்கோட்டை, ஜூன்18-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயலில் டி.ஜே. எஸ். மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது.இப்பள்ளியில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி மற்றும் 10,11, 12-ம் வகுப்புகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகையுடன் நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி,இப்பள்ளி நூறு சதவீத தேர்ச்சி பெற சிறப்பாக பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும்-அயராது பணியாற்றும் அலுவலக ஊழியர்களுக்கும் ரொக்க பரிசு வழங்கும் நிகழ்ச்சி என முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு, கல்லூரியின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜே. ஆறுமுகம் தலைமை தாங்கினார். பள்ளியின் தாளாளர் ஏ.பழனி முன்னிலை வகித்தார். அனைவரையும் கல்லூரியின் முதல்வர் பி.ஞானப்பிரகாசம் வரவேற்றார்.இதில்,சிறப்பு விருந்தினராக டி.ஜே. எஸ்.கல்விக்குழுமத்தின் தலைவரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வி நெறி காவலர் டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்துப் பேசினார்.

இதில், சிறப்பு அழைப்பாளராக பட்டிமன்ற பேச்சாளரும்,சென்னை புரசைவாக்கம் இ.எல். எம் பேப்ரிசியஸ் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியருமான ஜே.அருள்பிரகாஷ் கலந்துகொண்டு புதிய மாணவர்களை வரவேற்று பேசினார்.இதன்பின்னர், புதிய மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் அடங்கிய தொகுப்பையும்,கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு ஊக்க தொகையுடன்-நினைவு பரிசையும்,சிறப்பாக பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு-அயராது பணியாற்றும் அலுவலக ஊழியர்களுக்கு ரொக்க பரிசு தொகையையும் என மொத்தம் ரூ.3 லட்சத்து 24 ஆயிரத்து 140-யை வழங்கினர்.முடிவில், நிர்வாக அதிகாரி எஸ். ஏழுமலை நன்றி கூறினார்.



மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தே. கல்லுப்பட்டி ஒன்றியத்தில் எஸ். பாறைப்பட்டி இடத்தில் அதிமுக பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சரான எடப்பாடி பழனிச்சாமியின் 69 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் விழா மற்றும் அதிமுக உறுப்பினர் சேர்க்கும் முகாம் நடைபெற்றது. இதை அதிமுக அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆர். பி. உதயகுமாரின் தலைமையில் நடைபெற்றது. உடன் ஒன்றிய செயலாளர் ராமசாமி, அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் ராமகிருஷ்ணன், தகவல் தொழில் நுகர்வு பிரிவு கண்ணன், பாஸ்கரன், பொருளாளர் திருப்பதி, முன்னாள் எம்.எல்.ஏ. சரவணன், ஒன்றிய செயலாளர் அன்பழகன், சேடப்பட்டி ஒன்றிய செயலாளர் பிச்சைராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன், மீனவர் அணி சரவண பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புளியங்குடியில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் 9 ஆண்டுகால சாதனை விளக்க கண்காட்சி தொடக்கம்

தென்காசி, ஜூன்.18-

தென்காசி மாவட்டம் புளியங்குடி தனியார் கல்யாண மண்டபத்தில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் 9 ஆண்டுகால சாதனை விளக்க கண்காட்சியை தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா மாவட்டத் தலைவர் ராஜேஷ் ராஜா கண்காட்சியை ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தார், பாரதப் பிரதமரின் செல்வமகள் சேமிப்புத் திட்டத்தில் 50 பெண் குழந்தைகளுக்கு இலவச வங்கி கணக்கை துவங்கி வைத்து நல திட்டங்களை வழங்கி தலைமையேற்று நடத்தி வைத்தார்.



கன்னியாகுமரி பெருங்கோட்ட பொறுப்பாளர் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு எ.ஆனந்தன் மற்றும் நிகழ்ச்சியில் பால குருநாதன், மகளிர் அணி மாவட்டச் செயலாளர் ராஜலட்சுமி, பொதுச் செயலாளர் ராமநாதன், சண்முகசுந்தரம், மருது பாண்டியன், அனிதா செந்தில்குமார், கே.வி. கண்ணன் மாரீஸ்வரி, மகாலட்சுமி, மாரிஷ், மாரியப்பன், கடையநல்லூர் நகரத்தலைவர்சுப்பிரமணியன், தருமன், வாசுதேவநல்லூர் சோழராஜன், ராம்குமார், சங்கரன்கோவில் சண்முகராஜ், கரிவலம்கணேசன், குருவிகுளம் சங்கிலி பாண்டியன், ராதாகிருஷ்ணன், பாண்டித்துரை, மாவட்ட அமைப்பு சாரா பிரிவு தலைவர்வேல்பாண்டியன், ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினர், மேலும் மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆவுடையார்கோவில் தேரோடும் வீதிகளில்

# சாக்கடை நீர் ஓடி துர்நாற்றம் வீசுவதால் பொதுமக்கள் வேதனை

ஆவுடையார்கோவில், ஜூன்.18-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் நான்கு வீதிகள் உள்ளது, இந்த நான்கு வீதியின் வழியாகத்தான் எதிர்வரும் 23 -6- 2023 ஆம் தேதி காலை 10 மணி அளவில் உலக பிரசித்தி பெற்ற ஆத்மநாதர் ஆலயத்தின் தேரோடும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.



இந்நிலையில் ஆவுடையார்கோவில் வடக்கு வீதியிலும் ஆத்மநாதர் ஆலயத்தின் பின்பகுதியிலும் உள்ள அக்ரஹாரத்திலும் சாக்கடை நீர் வெளியேறாமல் ஆங்காங்கே அடைக்கப்பட்டு உள்ளதால் இதுகொசு உற்பத்தி கூடாரமாக திகழ்கிறது என்றும், அதனால் ஆவுடையார்கோவில் வடக்கு வீதியிலும் அக்ரஹாரத்திலும் வாழ்கின்றவர்கள் அடிக்கடி கொசு தொல்லைக்கு ஆட்பட்டு மருத்துவமனை சென்று வந்த வண்ணம் உள்ளனர் என்றும், பல்வேறு மர்ம காய்ச்சல்களும் இந்த பகுதியில் வாழ்கின்ற மக்களை தாக்குவதாக கூறப்படுகிறது, எனவே நகராட்சி நிர்வாகம் தேரோட்டம் நடைபெற இருக்கின்ற இந்த சூழலில் அடைபட்ட சாக்கடையை சரிசெய்து கொசு தொல்லையை ஒழித்து மக்கள் நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டும் என்று அப்பகுதியில் வாழுகின்றபொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# வைத்தீஸ்வரன் கோவிலில் தருமை ஆதீனம் 27வது குருமகா சன்னிதானத்தை சந்தித்து நடிகர் செந்தில் ஆசிபெற்றார்



மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை பிரபல திரைப்பட காமெடி நடிகர் செந்தில் நேரில் சந்தித்து ஆசிபெற்றார். அவர்களுக்கு தருமை ஆதீனம் சால்வை அணிவித்து நினைவு பரிசுடன் ஆசிவழங்கினார். முன்னதாக நவகிரக ஸ்தலங்களில் செவ்வாய் ஸ்தலமாக விளங்கிவரும் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் நடிகர் செந்தில் மற்றும் அவரது உறவினர்கள் சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து பொன்பேத்தி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட அண்டூர் முதல் ஆத்தங்கரை வரை சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலேர்த்துங்கன் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பேட்கோ மூலம் 33 இலட்சம் செலவில் அமைக்கப்படும் இப்பணியினை விரைவில் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விடும்படி ஆட்சியர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்கள். மேலும் பேட்கோ மூலம் பணி முடித்த பருத்திக்குடி சாலையையும் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் வட்டார வளர்ச்சி துறை மூலம் பொன்பேத்தியில் நடைபெறும் 100 நாள் வேலை பணிகளையும் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அதிகாரி சச்சிதானந்தம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பாலன், வட்டாட்சியர் பொய்யாத மூர்த்தி பேட்கோ நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# சீமை கருவேல மரங்களை அகற்றும் தமிழ்நாடு அரசு மீது நீதிமன்றம் அதிருப்தி

சென்னை , ஜூன்.18-

தமிழகத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக பிறப்பித்த உத்தரவுகளை, தமிழ்நாடு அரசு அமல்படுத்தவில்லை என சென்னை உயர்நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றக் கோரி மதிமுக பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்டோர் தாக்கல் செய்த வழக்குகள், நீதிபதிகள் சதீஷ்குமார் மற்றும் பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தன. அப்போது அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், தென்காசி மாவட்டத்தில் ஆயிரம் ஹெக்டேர் பரப்புக்கு மேலும், திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் 500 ஹெக்டேர் பரப்புக்கும் மேலும் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சுற்றுச்சூழலை பாதிக்கும் சீமைக் கருவேல மரங்களை அகற்துவது என அரசு கொள்கை முடிவு எடுத்த போதும், அதுசம்பந்தமாக உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகள் அமல்படுத்தப்படவில்லை என நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். அப்போது குறுக்கிட்ட அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர், உயர்நீதிமன்ற உத்தரவின்படி உரிய குழுக்கள் அமைக்கப்படும் என உத்தரவாதம் அளித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், குழுக்கள் அமைத்தது குறித்து ஜூலை 5ம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர். இல்லாவிட்டால் தகுந்த நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழியில்லை எனவும் எச்சரித்தனர்.




புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு இன்று நடைபெறுகிறது. புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல் நிலைப்பள்ளி முன்னாள் மாணவர் சந்திப்பு இன்று ஞாயிறு காலை 10மணிக்கு பள்ளி வளாகத்தில் பள்ளி முதல்வர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைப்பெறுகிறது. மேனாள் துணை முதல்வர் கவிஞர் நா.முத்துநிலவன், மற்றும் மேனாள், இந்நாள் ஆசிரியர்கள் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்வில் பொன்விழா சிறப்பு நிகழ்வுகளுக்கு மேனாள் மாணவர் உதவிகள் மற்றும் மலர் வெளியீடு குறித்த திட்டமிடல் உள்ளிட்டவை விவாதிக்கப்படவுள்ளது. முன்னாள் மாணவ-மாணவியர் அனைவரும் இச்செய்தியின் மூலம் தகவல் அறிந்து வருகை தருமாறு விழா ஏற்பாட்டாளர்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# சீர்காழி பகுதியில் நகராட்சி சார்பில் தரமற்ற சாலை போடுவதாக கூறி பணியை தடுத்து நிறுத்திய பொதுமக்கள்

சீர்காழி , ஜூன்.18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டுகளில் பல்வேறு சாலைகள் சேதமடைந்து உள்ளன. இதனை தொடர்ந்து நகர்புரத்தில் சுமார் 1கோடியே 54 லட்சம் மதிப்பில் 37 சாலைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.



சீர்காழி பழைய பேருந்து நிலையம் பகுதியில் முக்கிய சாலையான ஸ்டேட் பேங்க் சாலை அமைக்கும் பணி நடைபெற்றது. சாலை அமைப்பது குறித்து விபரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகை வைக்காமல் பழைய சாலைகள் அகற்றப்படாமல், அதன் மீது புதிய தார் சாலை தரமற்ற முறையில் அமைப்பதை கண்ட அப்பகுதி பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள், புதிய சாலை அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தியதுடன், பணியை மேற்கொண்டவர்களிடம் விளக்கம் கேட்டனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக அப்பகுதியில் சாலை போடும் பணிகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த நகராட்சி துறை சார்ந்த அதிகாரிகள், காவல் ஆய்வாளர் சிவகுமார், மற்றும் அதிகாரிகள் அங்கிருந்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர் தொடர்ந்து சாலைபணி தற்காலிகமாக நிறுத்திவைக்கபட்டது.

# சீர்காழி அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவ காப்பீடு அலுவலர் நோயாளிகளுக்கு சிகிச்சை வீடியோ வைரல்

சீர்காழி , ஜூன்.18-

சீர்காழி அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவர் இல்லாததால், மருத்துவ காப்பீடு அலுவலர் நோயாளிகளுக்கு மருத்துவர் போல சிகிச்சை அளிக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது,





மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகாவை சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த கிராமப்புற ஏழை மக்கள் சீர்காழி அரசு தலைமை மருத்துவமனையில் தினந்தோறும் ஆயிர கணக்கானோர் சிகிச்சை பெற்று செல்கின்றனர். இங்கு கடந்த சில மாதங்களாக மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லாததால் பற்றாக்குறை சூழ்நிலை நிலவி வருகிறது. இதனால் சிகிச்சைக்கு வரும் பொதுமக்கள் மருத்துவமனை நிர்வாக அலுவலகத்தில் வேலை பார்க்கும் அலுவலர்கள் நோயாளிகளை ஏமாற்றும் விதமாக தங்களை மருத்துவர்கள்போலசித்தரித்து வரக்கூடியவர்களுக்கு என்னவென்று கேட்டு அவர்களுக்கு மருந்து மாத்திரைகளை சீட்டில் எழுதி கொடுத்து வருகின்றனர்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இதுகுறித்து உடனடியாக மாவட்ட ஆட்சியர் தலையிட்டு உயிரிழப்பு ஏற்படுவதற்கு முன் உரிய மருத்துவர்களை நியமித்து மக்களை காப்பாற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜெயங்கொண்டம் தாலுக்கா அலுவலகத்தில் நான்காம் நாள் ஜமாபந்தி நிகழ்ச்சி

அரியலூர், ஜூன்.18-

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தாலுக்கா அலுவலகத்தில் நான்காம் நாள் ஜமாபந்தி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது.



அரியலூர் மாவட்டத்தில், 1432-ஆம் பசலி ஆண்டிற்கான, வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகிறது. ஜெயங்கொண்டம் வட்டத்திற்கான நான்காம் நாள் ஜமாபந்தி வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சி, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது. இதில் உடையார்பாளையம் உள்வட்டத்திற்குட்பட்ட, தேவாமங்கலம், அங்கராயநல்லூர் (மேல்பாகம்), அங்கராயநல்லூர் (கீழ்பாகம்), சூரியமணல் (குணமங்கலம், கச்சிப்பெருமாள், துளாரங்குறிச்சி உட்பட), இடையார் (ஏந்தல், தூங்கான் உட்பட), வாணதிரையன்பட்டினம், பிலிச்சிக்குழி (ஒக்கநத்தம், காங்கேயன்குறிச்சி உட்பட), உடையார்பாளையம் (மேற்கு), உடையார்பாளையம் (கிழக்கு), தா.சோழங்குறிச்சி (வடக்கு), தா.சோழங்குறிச்சி (தெற்கு), தத்தனூர் (மேற்கு), தத்தனூர் (கிழக்கு) ஆகிய 13 கிராம பொதுமக்களிடமிருந்து, பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 231 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 39 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு, இவர்களுக்கு இன்றைய தினமே பட்டா மாறுதலுக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

மீதமுள்ள 192 மனுக்கள் விசாரணையில் உள்ளது. இம்மனுக்களை உரிய விசாரணை செய்து தீர்வுகாணவும், கிராம கணக்குகளை முறையாக பராமரிக்கவும், நிலஅளவை அலுவலர் பயன்படுத்தும் கருவிகளை பார்வையிட்டு, உரிய முறையில் பராமரிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா அறிவுறுத்தினார்.

முன்னதாக, அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுகா, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (மேற்கு) மூன்றாம் வகுப்பு மாணவி மற்றும் சதுரங்க வீராங்கனை சர்வாணிகா, ஜார்ஜியா நாட்டில் 06.06.2023 முதல் 12.06.2023 வரை நடைபெற்ற சதுரங்க சாம்பியன் போட்டியில் இந்தியா சார்பில் கலந்துகொண்டு, மொத்தம் 11 சுற்றுகளில் 8 வெற்றிகள் பெற்று உலக அளவில் மூன்றாம் இடம்பிடித்து வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்ததையொட்டி, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரக மேலாளர்(பொது) குமரையா, வட்டாட்சியர் துரை, துணை வட்டாட்சியர்கள், நில அளவை அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மயிலாடுதுறையில் மனைவியிடம் தவறாக நடக்க முயன்ற நண்பனை கொலை செய்த இளைஞர் கைது

சீர்காழி, ஜூன்.18-

சீர்காழியில் மனைவியிடம் தவறாக நடக்க முயன்ற நண்பனை கொலை செய்த இளைஞரை போலீசார் கைது செய்தனர். மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சட்டநாதபுரம் ஊராட்சிக்குட்பட்ட மேல செங்கமேடு கிராமத்தை சேர்ந்த அய்யாசாமி மகன் சசிகுமார்.28. லாரி டிரைவர், இதேபோல் கடலூர் மாவட்டம் சிதம்பரம் துணிசிறமேடு பகுதியை சேர்ந்த கார்த்திகேயன் மகன் மணிமாறன்.31. கம்பி பிட்டர். இவர் தற்பொழுது சீர்காழி பிடாரி கீழ வீதியில் உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு தற்காலிகமாக குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

சசிக்குமாரும், மணிமாறனும் நண்பர்கள் என கூறப்படுகிறது. இந்நிலையில் அதிகாலை மணிமாறன் வீட்டு வாசலில் சசிகுமார் இறந்து கிடந்து உள்ளார். தகவல் அறிந்த சீர்காழி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சசிகுமார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன், சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்து சந்தேகத்தின் அடிப்படையில் மணிமாறனிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் மணிமாறனின் மனைவி நிரோஷா என்பவரிடம் சசிகுமார் தவறாக நடந்து கொள்ள முயன்றதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த மணிமாறன் நேற்று அதிகாலை சசிகுமாரின் கழுத்தை நெறித்து கொலை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து சீர்காழி போலீசார் கொலை வழக்கு பதிந்து மணிமாறனை கைது செய்து தொடர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



நெடுஞ்சாலைத்துறை புதுக்கோட்டை கோட்டம் சார்பாக கலைஞரின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் விதமாக மூக்கம்பட்டி ஊராட்சியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா கலந்துகொண்டு மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது புதுக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் சாமிநாதன், கறம்பக்குடி ஒன்றிய சேர்மன் மாலா ராஜேந்திரன், நெடுஞ்சாலைத்றை உதவிக்கோட்டப் பொறியாளர் நடராஜன், உதவி பொறியாளர் ஜனனி,.உடையப்பன், கலை, மணிகண்டன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் உலகபிரசித்தி பெற்ற ஸ்ரீஆத்மநாதர் ஆலயம் உள்ளது, இந்த ஆலயத்தின் பின்புறமாக வடக்கு வீதியில் திருவருட்பிரகாச வள்ளலார் தர்ம சபை அறக்கட்டளை மூலம் ஏழை,எளிய மக்களுக்கு தினந்தோறும் காலை மாலை இரவு என மூன்று வேளையும் பசியாற உணவு வழங்கி வருவது, பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. காலையில் ஊறுகாயுடன் கஞ்சியும், மதியத்தில் இரண்டு கூட்டு உட்பட சாப்பாடும், இரவு நேரத்தில்தயிர், மற்றும் புளிசாதம் உட்பட நூறு பொட்டலங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இது போன்று வள்ளலார் மன்றங்கள் பெருக வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் வைக்கின்றனர்.

# செங்கோட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி வாஞ்சிநாதனின் 112-வது நினைவு தினம்

தென்காசி, ஜூன்.18-

தமிழ்நாடு அரசு சார்பில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில், செங்கோட்டையில் உள்ள வாஞ்சி மணிமண்டபத்தில் அமைந்திருக்கிற வீரவாஞ்சிநாதன் சிலைக்கு, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



இந்நிகழ்ச்சியில் செங்கோட்டை நகர தி.மு.க செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் நகர்மன்றத் தலைவர் ராமலட்சுமி வடகரை சேர்மன் அ.சேக்தாவூது, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இளவரசி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் இராம சுப்பிரமணியன், செங்கோட்டை வருவாய் வட்டாட்சியர் முருகு செல்வி, வருவாய் ஆய்வாளர் குமார், கிராம நிர்வாக அலுவலர் முருகேசன், நூலகர் ராமசாமி, வாஞ்சிநாதன் தம்பி மகன் ஹரிஹர சுப்பிரமணியன், தி.மு.க நிர்வாகிகள் எஸ்.எம். ரஹீம், கென்னடி, மு.ஆபத்துக்காத்தான், லிங்கராஜ், மு.காதர் அண்ணாவி, பேபிரஜப் பாத்திமா, ஆ.சண்முகராஜா, லெ.சுப்ரமணியன், ஜோதிமணி, சிவ.ராஜா, சேட் என்ற சேக்மதார், இப்ராஹிம்,செங்கை குத்தா லிங்கம், கோவிந்தராஜ், பாலு, மாரியப்பன், கருப்பசாமி, குட்டிராஜா, கோவிந்தன், வேலுச்சாமி, கணபதி, ஆயிரப்பேரி முத்துவேல், வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி, ராமகிருஷ்ணன்,சிவகுமார், நீராத்தி லிங்கம், ஆசிரியர் செண்பககுற்றாலம், துரைராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு மரியாதை செலுத்தியும், அதனைத் தொடர்ந்து திருமங்கலம் கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற வீரவாஞ்சிநாதன் திருவுருவ சிலைக்கு செங்கோட்டை நகர தி.மு.க சார்பில் நகரச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# பூங்குடியில் பகுதி நேர நியாய விலை கடை திறப்பது எப்போது? கிராம மக்கள் எதிர்பார்ப்பு

ஆவுடையார்கோவில், ஜூன்.18-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் இரண்டு நியாய விலை கடைகள் உள்ளன, ஒன்று கீழ வீதியிலும் மற்றொன்று மேலே வீதியில் உள்ளது. கீழ வீதியில் உள்ளஅமுதம் அங்காடி என்ற பெயரில் உள்ளரேஷன் கடையில் 1500 குடும்ப அட்டைகளுக்கும் மேல் பயனாளிகள் அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், பருப்பு, ஆயிள் உள்ளிட்ட பொருட்களை குடும்ப அட்டைதாரர்கள் வாங்குகிறார்கள். இந்த கடை எப்பொழுதும் மக்கள் நெரிசலாக உள்ளதால் சாமான்கள் வாங்க வருகின்றவர்கள் மிகுந்த வேதனையில் வரிசையில் நின்றும் அவ்வப்போது பொருள் கிடைக்காமலும் திரும்பி செல்கிறார்கள்.



இன்னொரு கடை மேல வீதியில் உள்ளது, அந்த கடையிலும் 800 க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நெருக்கடி காரணமாக கருப்பூர், பூங்குடி, மைனாக்குடி உள்ளிட்ட மூன்று கிராம மக்கள் பயன்படுத்தும் வகையில் பூங்குடியில் புதிதாக நியாய விலை கடை கட்டப்பட்டு திறக்கப்படாமல் உள்ளது. எனவே இந்த மூன்று கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் பயன்படும் வகையில் உடனடியாக பகுதி நேர நியாய விலை கடையை திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு விட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

# புதுக்கோட்டை தேமுதிக தெற்கு மாவட்ட நிர்வாகிகள் நியமனம்

ஆலங்குடி, ஜீன்.18-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தேமுதிக புதிய நிர்வாகி பட்டியலை தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் வெளியிட்டார், அதன்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் தேமுதிக செயலாளராக பொன்னமராவதி பி.எல்.ராஜேந்திரன், மாவட்ட தேமுதிக அவைத் தலைவராக கைக்குறிச்சி செந்தில்குமார், மாவட்ட தேமுதிக பொருளாளராக ஆலங்குடி பழ நேதாஜி சீனிவாசன், மாவட்டக் தேமுதிக துணைச் செயலாளராக ராமசாமிபுரம் அனிதா கணேசன், பள்ளத்திவயல் ஆர். கே.சேகர், பொன்னமராவதி வி சுப்பிரமணியன், திருமயம் பி.சரவணன், மாநில செயற்குழு உறுப்பினராக பொன்னமராவதி ஆர்.எம். பழனியப்பன், அறந்தாங்கி காந்தி, மாநில பொதுக்குழு உறுப்பினராக மாஞ்சான் விடுதி ஆறுமுகம், வல்லத்திரா கோட்டை ரவி,நெம்மகோட்டை மெடிக்கல் அன்பு சண்முகம், ஆவுடையார் கோயில் சோமசுந்தரம், பொன்னமராவதி ஏ.செல்வம் ஆகியோர் நியமிக்கப்படுகிறார் என தேமுதிக பொதுச் செயலாளர் நிறுவனத் தலைவர் விஜயகாந்த் வெளியிட்டார்.

# திருச்சி அருகே டாஸ்மாக்கில் மது குடித்த இருவர் உயிரிழந்ததாக தகவல் - போலீஸ் விசாரணை

திருச்சி,ஜூன்.18-

தச்சங்குறிச்சி பகுதியைச் சேர்ந்த சிவகுமார், முனியாண்டி ஆகிய இருவரும் உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர்.

திருச்சி மாவட்டம் தச்சங்குறிச்சியைச் சேர்ந்த சிவகுமார் மற்றும் முனியாண்டி ஆகிய இருவரும் தச்சங்குறிச்சியில் உள்ள டாஸ்மாக் கடையில் மது வாங்கி குடித்ததாக கூறப்படுகிறது. பின்னர் வீடு திரும்பிய இருவருக்கும் கடும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டுள்ளது.



இதையடுத்து இருவரும் தச்சங்குறிச்சி அரசு மருத்துவமனைக்குச் சென்றுள்ளனர், அங்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காததால், இருவரையும் லால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு முனியாண்டிக்கு இரவு முழுவதும் குளுகோஸ் ஏற்றப்பட்டுள்ளது. வீட்டிற்குச் சென்று தூங்கிய சிவகுமார் உயிரிழந்ததாக தகவல் வெளியானது. மறுபுறம் மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட முனியாண்டியும் உயிரிழந்தார், இது குறித்து முனியாண்டியின் மகன் மணிராஜ் என்பவர் போலீசில் புகார் அளித்தார். இந்த சம்பவம் தொடர்பாக திருச்சி மாவட்ட எஸ்.பி., லால்குடி டி.எஸ்.பி. உள்ளிட்டோர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சங்கரன்கோவில் மாணவி முத்துலட்சுமி வேளாண் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் மாநில அளவில் சாதனை

தென்காசி,ஜூன்.18-

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் 200 மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களை விழுப்புரத்தைச் சேர்ந்த திவ்யா ,மதுரையை சேர்ந்த ராம், சங்கரன்கோவில் நவநீதகிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த மாணவி முத்துலட்சுமி ஆகியோர் மாநில அளவில் சாதனை புரிந்துள்ளனர்.



சங்கரன்கோவில் அருகே உள்ள நவநீதகிருஷ்ணபுரத்தைச் சேர்ந்தவர் சண்முகசாமி, இவரது மனைவி வள்ளியம்மாள். சண்முக சாமி ஆடு மேய்க்கும் தொழிலாளி ஆவார், இவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்கள். இவர்களின் மகள் முத்துலட்சுமி வேளாண் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் 200 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்துள்ளார். முத்துலட்சுமி தனது ஆரம்ப கால பள்ளிபடிப்பை நவநீதகிருஷ்ணாபுரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் படித்து உள்ளார். 6ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை சங்கரன்கோவில், ராஜபாளையம் சாலையில் உள்ள எஸ். என். ஆர் மேல்நிலைப் பள்ளியில் படித்துள்ளார்.

தற்போது வெளியான 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் இயற்பியல், வேதியல், உயிரியல், கணிதம் ஆகிய நான்கு பாடங்களில் 100 முழுமதிப்பெண்கள் பெற்று முத்துலட்சுமி 600க்கு 583 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார், தொடர்ந்து வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தர வரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளில் முத்துலட்சுமியும் ஒருவர் ஆவார். வேளாண் பல்கலைக்கழக பட்டியலில் முதலிடம் பிடித்த முத்துலட்சுமியை பள்ளி தலைமை ஆசிரியர் நாகராஜ், வகுப்பு ஆசிரியர் பார்வதி சிவகாமிநாதன், மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

ஆடு மேய்க்கும் தொழிலாளியின் மகள் வேளாண் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்த மாணவி முத்துலட்சுமிக்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ அந்த மாணவியின் வீட்டிற்கு நேரில் சென்று வாழ்த்துதெரிவித்துள்ளார், அப்பொழுது மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை, தலைவன் கோட்டை கூட்டுறவு வங்கித் தலைவர் விஜயபாண்டியன், பஞ்சாயத்து தலைவர் வீரம்மாள்,ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

சீர்காழி பகுதிகளில் உரிய ஆவணங்கள் இன்றி இயக்கப்பட்ட

# ஐந்து ஆட்டோக்கள் பறிமுதல் ,மோட்டார் வாகன ஆய்வாளர் நடவடிக்கை



சீர்காழி , ஜூன்.18-

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி உத்தரவின் படி, சீர்காழி மோட்டார் வாகன ஆய்வாளர் விஸ்வநாதன் சீர்காழி, தென்பாதி ஆகிய பகுதிகளில் திடீர் வாகன தணிக்கை செய்தார். அப்போது பள்ளி மாணவர்களை அழைத்துச் சென்ற ஆட்டோக்களை நிறுத்தி சோதனை செய்தபோது, உரிய ஆவணங்கள், தகுதி சான்றிதழ் இல்லாமல் இயக்கப்பட்டது தெரியவந்தது.

இதனை அடுத்து 5 ஆட்டோக்களை பறிமுதல் செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு கொண்டு சென்றார். தொடர்ந்து சீர்காழி பகுதிகளில் உரிய ஆவணங்கள் இன்றி இயக்கப்படும் பள்ளி மாணவர் ஏற்றி செல்லும் வாகனங்கள் பறிமுதல் செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மோட்டார் வாகன ஆய்வாளர் விஸ்வநாதன் எச்சரித்தார்.

# கறம்பக்குடியில் மது, போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



கறம்பக்குடி, ஜூன்.18-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா உத்தரவின் படி கறம்பக்குடி தாலுகாவில் போதை மற்றும் மதுவிற்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

புதுக்கோட்டை உதவி ஆணையர் (கலால்) மாரி தலைமை வகித்தார், கறம்பக்குடி வட்டாட்சியர் இராமசாமி மற்றும் புதுக்கோட்டை கோட்டக்கலால் அலுவலர் ஜெயபாரதி ஆகியோர் முன்னிலை வகித்னர், இப்பேரணியில் மது மற்றும் போதைக்கு எதிரான விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நாடகமும் நடத்தப்பட்டது, இதில் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

# ஆவுடையார்கோவில்தாலுகா அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்றது

*ஆவுடையார்கோவில், ஜூன்.18-*

*ஆவுடையார்கோவில் தாலுகா அலுவலகத்தில் பசலி 1432 வருவாய் தீர்வாயம் கலால் மேற்பார்வை அலுவலர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. முதல்நாள் பொன்பேத்தி சரகத்திற்கான கிராம கணக்குகள் தனிக்கை செய்யப்பட்டது, அந்த சரகத்தில் உள்ள பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டது.*



*தொடர்ந்து வரும் 17ம் தேதி மீமிசல் சரகத்திற்கும், 20ம் தேதி ஏம்பல் சரகத்திற்கும், கடைசியாக 21ம் தேதி ஆவுடையார்கோவில் சரகத்திற்கும் கிராம கணக்குகள் தனிக்கை செய்யப்பட உள்ளது. மாலையில் குடிகள் மாநாடு நடைபெறும், நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை தாசில்தார் மார்ட்டின் லூதர் கிங் செய்திருந்தார். நிகழ்ச்சியில் தனித் தாசில்தார், துணை தாசில்தார்கள், வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், வேளாண்மைத் துறை, புள்ளியியல் துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.*

# மருத்துவமனையிலேயே வைத்து செந்தில் பாலாஜியை 8 நாள் காவலில் அமலாக்கத் துறை விசாரிக்க அனுமதி

*சென்னை , ஜூன்.18-*

*இதய அறுவை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியை, அமலாக்கத்துறை அதிகாரிகள் அந்த மருத்துவமனையிலேயே 8 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி, உயர் நீதிமன்ற உத்தரவுப்படி தற்போது சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இன்னும் சில நாட்களில் அங்கு அவருக்கு இதய பைபாஸ் அறுவை சிகிச்சை செய்வதற்கான பணிகள் நடந்து வருகின்றன.*

*இந்நிலையில்,செந்தில் பாலாஜியை 15 நாட்கள் காவலில்எடுத்துவிசாரிக்க அனுமதிக்க கோரி, அமலாக்கத்துறைசார்பில் சென்னை முதன்மை அமர்வுநீதிமன்றத்தில்மனு தாக்கல் செய்யப்பட்டது.*

*விசாரணை அதிகாரியான அமலாக்கத் துறை துணை இயக்குநர் கார்த்திக் தாசரி தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது: செந்தில் பாலாஜியின் வீட்டில் சோதனைக்கு சென்றபோது, அமைச்சர் என்ற தொனியில் அமலாக்கத் துறை அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்து, விசாரணைக்குஒத்துழைக்க மறுத்துவிட்டார்.அன்றைய தினம் நடைபயிற்சிக்கு சென்றபோது நன்கு ஆரோக்கியத்துடன் இருந்த அவர் திடீரென நெஞ்சுவலி என்று கூறி, அரசு மருத்துவமனையில் சேர்ந்துள்ளார்.*

*போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தபோது, அரசு போக்குவரத்து கழகங்களில் பல்வேறு முறைகேடுகளை செய்து தகுதியற்ற பலருக்கு பணிநியமனம் வழங்கியுள்ளார். அவர் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதற்கான*



*ஆதாரங்கள் உள்ளன. அவரை வெளியே விட்டால், சாட்சிகளை கலைத்து விடுவார். அவரை காவலில் எடுத்து விசாரித்தால் மட்டுமே உண்மை தெரியவரும். எனவே, அவரை 15 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும்.*

*இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது. இதேபோல,ஜாமீன்கோரி செந்தில் பாலாஜி தரப்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டது.*

*சென்னை முதன்மை அமர்வுநீதிபதிஎஸ்.அல்லி முன்பு இந்த மனுக்கள் மீதான விசாரணை வியாழன்கிழமை மாலை நடந்தது. அப்போது, செந்தில்பாலாஜி தரப்பில் மூத்தவழக்கறிஞர்என்.ஆர். இளங்கோ, வழக்கறிஞர் சரவணன் ஆகியோரும், அமலாக்கத்துறைசார்பில் மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ ஆர்எல் சுந்தரேசன் மற்றும் அமலாக்கத் துறையின் சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ரமேஷ் ஆகியோரும் ஆஜராகி வாதிட்டனர்.*

*இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி அல்லி, இந்த மனுக்கள் மீதான தீர்ப்பைவெள்ளிக்கிழமை தள்ளிவைத்தார். அதன்படி, நீதிபதி அல்லி முன்புஅமலாக்கத் துறை சார்பில் வழக்கறிஞர் என்.ரமேஷ், செந்தில் பாலாஜிதரப்பில் வழக்கறிஞர் சரவணன் ஆகியோர் நேற்று மாலை ஆஜராகினர். காணொலி வாயிலாக செந்தில் பாலாஜியும் ஆஜர்படுத்தப்பட்டார்.*

*இதையடுத்து நீதிபதி அல்லி பிறப்பித்த உத்தரவு: தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை அதிகாரிகள் 8 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்கலாம். அதிகாரிகள் அந்த மருத்துவமனையிலேயே விசாரணையை தொடர வேண்டும்.*

*விசாரணை முடிந்த பிறகு, அவரைஜூன் 23-ம் தேதி மாலை 3 மணிக்குகாணொலிகாட்சி வாயிலாக ஆஜர்படுத்த வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டார். செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கோரிய மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டார்.*

*செந்தில் பாலாஜி தரப்பில் வழக்கறிஞர் சரவணன் ஆஜராகி, “அவருக்கு 3 நாட்களில் பைபாஸ் அறுவை சிகிச்சைசெய்யப்பட உள்ளது. இந்த சூழலில்காவலில் எடுத்து விசாரிக்கஅனுமதித்தால், அமலாக்கத்துறையினரால் அவருக்கு இடையூறு ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது” என்று கேள்வி எழுப்பினார்.*

*அதற்கு நீதிபதி, “விசாரணையின்போது, இடையூறு இருப்பதாக கருதினால், தாராளமாக நீதிமன்றத்தை அணுகலாம்” என்றார்.*

# திருத்துறைப்பூண்டியில் நேற்று தொடங்கிய 16வது தேசிய நெல் திருவிழாவில் அமைச்சர் மெய்யநாதன் பங்கேற்பு





**திருத்துறைப்பூண்டி , ஜூன்18**

**திருத்துறைப் பூண்டியில் பாரம்பரிய நெல் ரகங்களை மீட்பதை தனது வாழ்நாள் கொள்கையாக வைத்திருந்த நெல் ஜெயராமனின் தேசிய நெல் திருவிழாவில் தமிழக அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.**

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தனலட்சுமி தனியார் திருமண அரங்கில் மறைந்த நம்மாழ்வார் கடந்த 2007ஆம் ஆண்டு இந்த பாரம்பரிய நெல் திருவிழாவை தொடங்கி வைத்தார். அதனை முன்னெடுத்து நடத்தி வந்தவர் மறைந்த நெல் ஜெயராமன் ஆவார். தமிழர்கள் பாரம்பரியமாக சாகுபடி செய்து வந்த மறைந்துபோன நெல் ரகங்களை மீட்பதை இந்த நெல் திருவிழா நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நெல் திருவிழா தொடங்கியபோது சுமார் பத்துக்கும் மேற்பட்ட மறைந்துபோன நெல் ரகங்களை கொண்டு தொடங்கப்பட்டது. தற்போது மாப்பிள்ளை சம்பா, குதிரைவாலி, காட்டுயானம், யானைக்கவுனி, சீரக சம்பா, கிச்சலி சம்பா, கருடன்சம்பா,தூயமல்லி, குள்ளக்கார் உள்ளிட்ட 174 நெல் ரகங்கள் மீட்டெடுக்கப்பட்டு விவசாயிகளுக்குள்ளாகவே பரிமாற்றம் செய்து வழக்கில் இருந்து மறைந்த பாரம்பரிய நெல் ரகங்கள் தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கேரளா, கர்நாடகா, ஒடிசா போன்ற மாநிலங்களுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 16வது பாரம்பரியநெல்திருவிழா ஆதிரெங்கம் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ஆராய்ச்சி மையம் சார்பில் திருத்துறைப்பூண்டியில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் தொடங்கியுள்ளது. திருத்துறைப்பூண்டி உழவர் சந்தை பகுதியில் இருந்து இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மற்றும் பாரம்பரிய நெல் மீட்பாளர் நெல் ஜெயராமன்,இயற்கை ஆர்வளர் புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு.சின்னப்பா உள்ளிட்டவர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டு நெல் கோட்டை வைத்து மாட்டுவண்டியில் காய்கறிகளால் அலங்காரம்செய்யப்பட்டு விவசாயிகள் ஊர்வலமாக வந்து இத்திருவிழாவில் பங்கேற்றுள்ளனர்.

இந்த ஊர்வலத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுரேஷ்குமார் தொடங்கி வைத்தார். இந்த பேரணியில் மாணவர்கள் சிலம்பாட்டம் மற்றும் பாரம்பரிய தமிழ் பண்பாட்டு முறைப்படி மேளதாளங்கள் முழங்க தப்பாட்டம் அடிக்கப்பட்டு விவசாயிகள் பேரணியாக வருகை தந்தனர். இந்த நெல் திருவிழாவில் திருவாரூர் மாவட்டம் மட்டுமின்றி தஞ்சை, நாகை, திருச்சி, தர்மபுரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை போன்ற பிற மாவட்டங்களில்இருந்தும் இயற்கை முறையில் சாகுபடி செய்யும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். இயற்கை முறையில் பாரம்பரிய நெல் சாகுபடியில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட விவசாயிகளும் இந்த நெல் திருவிழாவில் கலந்துகொண்டுள்ளனர்.

பாரம்பரிய நெல் திருவிழாவில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த நல்ல திருவிழாவில் பாரம்பரிய நெல் சாகுபடியில் அதிகம் லாபம் பெறுவது என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நீர் மேலாண்மையின் அவசியம் குறித்து விவசாயிகளிடையே பேசப்பட்டதுதொடர்ந்து பாதுகாப்பான உணவின் அவசியம் குறித்து விவசாயிகள் மற்றும் மாணவர்களிடையே மருத்துவர்கள் இயற்கை வழி வேளாண் விவசாயி பாஸ்கர் ஆகியோர் பேசினர். மேலும் மூத்த வேளாண் அதிகாரிகள் உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர்.

நெல் திருவிழாவில் பங்கேற்றவர்களுக்கு இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்ட பொருட்களில் இருந்து உணவுகள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 174 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் அரங்கங்கள் அமைக்கப்பட்டுஅவற்றை ஏராளமான விவசாயிகள் பார்வையிட்டு வருகின்றனர். நெல் திருவிழாவின் முக்கிய நோக்கமான இயற்கை பாரம்பரிய நெல் ரகங்களை பங்கேற்றுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் 2 கிலோ இலவசமாக வழங்கப்பட்டு அவற்றை சாகுபடி செய்து அடுத்த ஆண்டுநான்குகிலோவாக விவசாயிகள் திருப்பி அளிக்க உள்ளனர்.இதன் மூலமாக பாரம்பரிய இயற்கை நெல் ரகங்கள் சுழற்சி முறையில் தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களிலும் பரவலாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் பாரம்பரிய நெல்திருவிழாவில் கலந்து கொண்ட விவசாயிகள் கூறுகையில் :- மாப்பிள்ளை சம்பா என்கிற அரிசி பல ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருப்பவர்களுக்கு இந்த அரிசியை உண்டால் குழந்தை பாக்கியம் உருவாகும் அதேபோன்று பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளது நம்முடைய பாரம்பரிய நெல் ரகங்கள் இந்த பாரம்பரிய நெல் ரகங்களை மறைந்த வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மற்றும் நெல் ஜெயராமன் அவர்கள் மீட்டெடுத்து அதனைத் தொடர்ந்து தற்போது அவர்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் தமிழகமக்கள் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களுக்கு இதனை கொண்டு சேர்த்து வருகின்றனர். மேலும் இந்த நிலைத் திருவிழாவில் நாங்கள் முதன்முதலாக கலந்து கொள்கின்றோம் இங்கு வந்து பல்வேறு அரிசியின் முக்கியத்துவங்கள் உணர்த்தும் வகையில் வேளாண் வல்லுநர்கள் மற்றும் விவசாயிகள் எடுத்துரைக்கின்றனர் எங்களுக்கு இது ஒரு ஊக்கமாகஇருப்பதாகவும் பெண் விவசாயிகள் தெரிவித்தனர். இந்த விழா இன்று நிறைவு பெறவுள்ளது.

---

கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில்

## ஆசிரியர்களுக்கு தொடர் பணித்திறன் மேம்பாட்டு பயிற்சி



கந்தர்வக்கோட்டை, ஜூன்18

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு 109 மையங்களில் தொடர் பணித்திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் 3 மையங்களில் நடைபெற்ற பயிற்சியினை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா பார்வையிட்டு ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 6- ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 70 மையங்களிலும்,9 மற்றும் 10 - ம் வகுப்பு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 39 மையங்களிலும் குறுவள மைய அளவிலான பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் தேர்வு செய்யப்பட்ட ஆசிரிய கருத்தாளர்களும், ஆசிரியப்பயிற்றுனர்களும் கலந்துகொண்டு சூழல் அமைப்பு,மாணவர்களின் உடல் நலம், நல்வாழ்வு பற்றியும் ,பள்ளிகளில் மன்றச்செயல்பாடுகளை எவ்வாறு சிறப்பாக செயல்படுத்துவது என்பது குறித்தும், நாடகம்,இசை போன்ற கலையரங்க நிகழ்வுகளை எவ்வாறு சிறப்பாக நடத்துவது பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் கலந்தாய்வு முறையில் விவாதம்வாயிலாக பயிற்சி அளித்தனர்.6- ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை நடைபெற்ற பயிற்சியில் 1938 ஆசிரியர்களும்,9 மற்றும் 10 வகுப்புகளுக்கு நடைபெற்ற பயிற்சியில் 1225 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் கந்தர்வக்கோட்டை அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள், புதுநகர் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய மையங்களில் நடைபெற்ற பயிற்சியினை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா பார்வையிட்டு ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார். இந்நிகழ்வில் உதவித்திட்ட அலுவலர்- தொடக்கக்கல்வி ( பொ) தங்கமணி,வட்டாரக்கல்வி அலுவலர்கள் வெங்கடேஸ்வரி, நரசிம்மன், வட்டார வள மைய மேற்பார்வையாளர் (பொ)பிரகாஷ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.இதே போல புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற பயிற்சியினை கல்வித்துறை அலுவலர்கள் பார்வையிட்டு அறிவுரைகள் ஆலோசனைகள் வழங்கினார்கள்.




# குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிறைவு நிகழ்ச்சி

குத்தாலம், ஜுன். 18-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டத்தில் 1432-பசலிக்கான வருவாய் கணக்குகள் சரிபார்த்தல் மற்றும் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெரும் ஜமாபந்தி நிகழ்ச்சியானது 07ம் தேதி முதல் 15 ஆம் தேதி வரையில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அம்பிகாபதி தலைமையில் நடைபெற்றது.



இதில் குத்தாலம் வட்டத்தை சேர்ந்த 54 வருவாய் கிராமங்களின் வருவாய் கணக்குகள் ஆய்வுகள் செய்யப்பட்டு, பொதுமக்களிடம் இருந்து பல்வேறு குறைகளுக்கான மனுக்கள் பெறப்பட்டது.

குத்தாலம் வட்டாட்சியர் இந்துமதி முன்னிலையில் இறுதி நாளான நேற்று ஜமாபந்தி அலுவலரும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலருமான அம்பிகாபதியால் 13 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாவும், 5 நபர்களுக்கு குடும்பத் தலைவர் இறப்பிற்கான ஈமச்சடங்கு நிதியும் 5 நபர்களுக்கு திருமண உதவி தொகையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் குத்தாலம் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் சண்முகம், குடிமை பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் பிரான்ஸ்வா, மயிலாடுதுறை பேரிடர் மேலாண்மை தனி வட்டாட்சியர் காந்திமதி, துணை வட்டாட்சியர்கள் ராஜன் மற்றும் ராஜு, நில அளவைப் பிரிவு வட்ட துணை ஆய்வாளர் சபரிநாதன் வருவாய் ஆய்வாளர்கள் பாலமுருகன், ஜெயந்தி, ஷர்மிளா கிராம நிர்வாக அலுவலர்கள் ராஜ்மோகன், சண்முகம், சங்கர், சுவாமிநாதன், கிராம உதவியாளர்கள் நல்ல முகமது, சுந்தரம் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை நகரில் ராஜகோபாலபுரத்தில் அமைந்திருக்கும் இந்த ஆவின் சென்டரில் குழந்தைகள் விளையாடி மகிழ அமைக்கப்பட்டிருக்கும் பூங்காவானது பராமரிப்பு இன்றி புல் பூண்டுகள் முளைத்து மோசமாக காணப்படுகின்றது. இதனை சம்பந்தப்பட்ட துறை கவனத்தில் கொண்டு பராமரித்திட வேண்டும் என்பது புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு

### சென்னையில் கைதான

# பாஜக மாநிலச் செயலாளருக்கு 15 நாள் நீதிமன்ற காவல் மதுரை சிறையில் அடைப்பு



மதுரை , ஜுன். 18-

ட்விட்டரில் பொய்ச் செய்தி பரப்பியதாக தொடரப்பட்ட வழக்கில் சென்னையில் கைது செய்யப்பட்ட பாஜக மாநில செயலாளர் எஸ்.ஜி.சூர்யா 15 நாள் நீதிமன்றக் காவலில், மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

தமிழக பாஜக மாநில செயலாளராக இருப்பவர் எஸ்.ஜி.சூர்யா. இவர் சில நாட்களுக்கு முன்பு தனது ட்விட்டர் பக்கத்தில், 'மதுரை மாவட்டத்தில் உள்ள பெண்ணாடம் என்ற பேரூராட்சியில் மலக்குழி மரணம் நிகழ்ந்தது. கம்யூனிஸ்ட் கவுன்சிலரால் நிகழ்ந்தது. சு.வெங்கடேசன் கள்ள மௌனம் காக்கிறார்' எனப் பதிவிட்டிருந்தார்.

'இது பொய்யான தகவல். சூர்யா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என மதுரை மாநகர் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. இப்புகாரின் பேரில் சூர்யா மீது வழக்குப் பதிவு செய்த போலீஸார், சென்னையில் வெள்ளியிரவு அவரை கைது செய்தனர். சூர்யா கைது செய்யப்பட்டதற்கு மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், எல். முருகன், பாஜக தலைவர் அண்ணாமலை ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, சென்னையிலிருந்து சூர்யாவை நேற்று காலை மதுரைக்கு அழைத்து வந்த போலீஸார், அவரை மாவட்ட விரைவு நீதிமன்ற நீதிபதி ராம்சங்கரன் முன்பு ஆஜர்படுத்தினர். அவரை 15 நாள் நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் சூர்யா மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

நீதிமன்றம் விடுமுறை என்பதால் நீதிபதி வீட்டில் சூர்யாவை போலீஸார் ஆஜர்படுத்தினர். அப்போது, மதுரை பாஜகவினர் 100-க்கும் மேற்பட்டவர்கள் நீதிபதி வீடு அமைந்திருக்கும் பாரதி உலா வீதியில் கூடினர். போலீஸாரை கண்டித்து சிறிது நேரம் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

முன்னதாக, இந்தச் சம்பவம் தொடர்பாக மதுரை எம்பி சு.வெங்கடேசன் இன்று வெளியிட்ட அறிக்கையில், "மத்திய அரசின் முக்கியத் துறை அமைச்சர்கள் சமூக வலைத் தளத்தில் பொய்யை, பீதியை பரப்புகிற ஒருவருக்காக இவ்வளவு அக்கறை எடுத்து, நேரம் செலவழித்து வக்காலத்து வாங்குவது உண்மைக்கும் இவர்களது அரசியல் நோக்கத்திற்கும் எவ்வளவு பெரிய இடைவெளி உள்ளது என்பதையே காட்டுகிறது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

# 3 ஆண்டுகளுக்கு மேல் உற்பத்தி பணிகள் நிறுத்தம் 'என்டிசி' நூற்பாலைகளில் துருப்பிடிக்கும் இயந்திரங்கள்

கோவை , ஜுன். 18-

கட்டமைப்பு வசதிகள், தொழிலாளர்கள் என அனைத்து வசதிகள் இருந்தும் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேல் தமிழகத்தில் என்டிசி நூற்பாலைகள் முடங்கிக் கிடக்கின்றன. தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் துருப்பிடித்து ஸ்கிராப்பாக மாறி வருகின்றன.



கடந்த 1974-ல் தேசிய பஞ்சாலைக் கழகம் (என்டிசி) அமைக்கப்பட்டு 123 மில்கள் இணைக்கப்பட்டன. லாப நோக்கம் இல்லாமல் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டது. 123 என்டிசி நூற்பாலைகளில் தமிழகத்தில் 15 நூற்பாலைகள் செயல்பட்டு வந்தன. நாடு முழுவதும் ரயில்வே, காவல்துறை, ராணுவம் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளுக்கு ஆடைகள் விநியோகம் செய்யும் பணி வாய்ப்புகள் கிடைத்து அதன்பேரில் நூல் தயாரிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக 100 நூற்பாலைகள் மூடப்பட்டன. கடந்த 15 ஆண்டுகளாக 23 நூற்பாலைகள் மட்டுமே நாடு முழுவதும் செயல்பட்டு வந்தன.

கரோனா நோய்தொற்று பரவல் காரணமாக கடந்த 2020-ம் ஆண்டு மே மாதம் முதல், 23 நூற்பாலைகளிலும் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்றுவரை மீண்டும் உற்பத்தி தொடங்கப்படவில்லை. இதனால், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான இயந்திரங்கள் துருப்பிடித்து இரும்பு கழிவுகளாக மாறி வருகின்றன.

இதுதொடர்பாக இந்திய தொழிலாளர் சம்மேளனம் (எச்எம்எஸ்) மாநில செயலாளர் டி.எஸ்.ராஜாமணி, கோவை ஜில்லா நூற்பாலை தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் எம்.ஆறுமுகம் உள்ளிட்டோர் கூறியதாவது:

தேசிய அளவில் உள்ள 23 நூற்பாலைகளில் தமிழகத்தில் ஏழு நூற்பாலைகள் அமைந்துள்ளன. கோவையில் ரங்கவிலாஸ், முருகன், பங்கஜா, கோவை ஸ்பின்னிங் அண்ட் வீவிங், கம்போடியா, சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் பகுதியில் காளீஸ்வரா (பி), ராமநாதபுரம் மாவட்டம் கமுதக்குடியில் பயோனீர் ஸ்பின்னர்ஸ் உள்ளிட்டவையாகும். நிரந்தர மற்றும் தற்காலிக பிரிவில் மொத்தம் 5,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

கரோனா நோய்தொற்று பரவல் காலத்தில் நிறுத்தப்பட்ட நூல் உற்பத்தி பணிகள் இன்று வரை மீண்டும் தொடங்கப் படவில்லை. தொழிலாளர்களுக்கு பாதி மாத ஊதியம் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. இடையே சில மாதங்கள் பாதி ஊதியம் வழங்குவதும் நிறுத்தப்பட்டது. பணப்பலன்கள் நிலுவை வைக்கப்பட்டன. அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் தொடர்ந்து நடத்தப்பட்ட போராட்டங்களை அடுத்து தொழிலாளர்களுக்கு நிலுவை வைக்கப்பட்ட பல மாத ஊதியம் மற்றும் பணப்பலன்கள் சிறிதளவு வழங்கப்பட்டது. இருப்பினும் தொழிலாளர்களின் நலனுக்கான பிஎப், பென்ஷன் திட்டங்களுக்கு தொகை சரிவர செலுத்தப்படுவதில்லை.

கட்டமைப்பு வசதி, தொழிலாளர்கள் என அனைத்தும் இருந்த போதும் என்டிசி நூற்பாலைகளில் மீண்டும் உற்பத்தியை தொடங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக செயல்பட்டு வருகிறது. இதனால் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஜவுளித்துறை அமைச்சர், செயலர், என்டிசி தலைமை அலுவலகத்தின் உயரதிகாரிகள் என அனைவரையும் சந்தித்து என்டிசி நூற்பாலைகளை மீண்டும் இயக்க வலியுறுத்தி உள்ளோம். மூன்றாண்டுகள் கடந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அனைத்து தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி விரைவில் கூட்டம் நடத்தி மத்திய அரசின் இறுதி முடிவு என்ன என்பதை தெரிந்து கொள்வதுடன் இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் வகையில் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் சிறுணியம் பி.பலராமன் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் , ஜுன்.18-

திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் ஆண்டார்குப்பம் அடுத்த மாதவரம் பகுதியில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும், பொன்னேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்தும், பூத் கமிட்டி அமைப்பது, உறுப்பினர் படிவத்தை விரைவில் தலைமை கழகத்தில் கொண்டு சேர்ப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.



மேலும், ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையில் மதுரையில் நடைபெறும் மாநாடுக்கு அலை கடலென திரண்டு சென்று நமது பலத்தை நிரூபிப்போம் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில், முன்னாள் எம்.எல்.ஏ.பொன்ராஜா, ஒன்றிய செயலர்கள் பிரகாஷ், முத்துகுமார், பேரூர் செயலாளர் ஏ.எம்.தயாளன், செல்வகுமார், நிர்வாகிகள் ஆரணி துளசி என்ற முனுசாமி, ராமகிருஷ்ணன், சிறுவாபுரி தனஞ்செழியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கல்லணை வந்த காவிரி நீரை புதுவை மாநில அதிகாரிகள் பார்வையிட்டனர்

காரைக்கால் , ஜுன்.18-

தமிழக முதல்வர் சில தினங்களுக்கு முன்பு மேட்டூரில் இருந்து காவிரி நீர் குருவை பாசனத்திற்காக திறந்து விடப்பட்ட நிலையில் கல்லணை வந்தடைந்த காவிரி நீரை வெள்ளிக்கிழமை காலை கல்லணையில் இருந்து குருவை பாசனத்திற்காக தமிழக அமைச்சர் நேரு தலைமையில் காவிரி நீர் திறந்து விடப்பட்டது.



இந்நீர் காரைக்கால் பாசனத்திற்காக 10 நாட்களுக்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது, இந்நிகழ்வில் புதுவை மாநில பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் சத்தியமூர்த்தி செயற்பொறியாளர் (நீர்ப்பாசனம்) மகேஷ் உதவி பொறியாளர்கள் செந்தில்குமார் ராஜசேகர் .வேலுசாமி மற்றும் காரைப் பிரதேச விவசாய சங்க தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மேலும் செயற்பொறியாளர் மகேஷ் கூறுகையில் காவிரி நீர் கடைமடை பகுதியான காரைக்காலுக்கு வந்தடைந்த பிறகு எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதை தெரிவிப்பதாக கூறினார்.

# குறுவை சாகுபடியை காப்பாற்ற மாளந்தூர் ஊராட்சியில் உடைந்த மின் கம்பத்தை மாற்றி தர விவசாயிகள் கோரிக்கை

ஊத்துக்கோட்டை, ஜுன்18-

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் வெயில் வாட்டி எடுத்து வருகிறது. இருப்பினும், ஒரு சில இடங்களில் மாலை நேரங்களில் மேகமூட்டம் ஏற்பட்டு பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் ஒரு சில இடங்களில் மின்தடை ஏற்பட்டும், போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டும் பொதுமக்கள் பல்வேறு வகையில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இவற்றையும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் நடைவடிக்கை எடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்றனர்.



திருவள்ளூர் மாவட்டத்தில் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் திருவள்ளூரின் மையப் பகுதியில் உள்ள புகழ்பெற்ற அம்மன் கோவிலின் வேப்பமரம் வேரோடு சாய்ந்தது. அதனை பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் அதே இடத்தில் கிரேன் மூலம் நட்டு வைத்தனர். இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மாளந்தூர் ஊராட்சியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பலத்த காற்றுடன் மழை பெய்தது. அப்பொழுது முனீஸ்வரன் கோவில் அருகே உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து ஆத்துமேடு பகுதிக்கு மின் வயர் செல்லும் மின் கம்பம் ஒன்று உடைந்து விழுந்தது. அப்பொழுது மின் தடை ஏற்பட்டது. இச்சம்பவத்தில் யாருக்கும் அதிர்ஷ்டவசமாக பாதிப்பு ஏற்படவில்லை. இந்நிலையில், ஊத்துக்கோட்டை துணை மின் நிலையத்தில் இருந்து வந்த மின்வாரிய அதிகாரிகள் ஆத்துமேடு பகுதிக்கு செல்லும் மின் வயர்களை துண்டித்து விட்டு மின்சார சப்ளை செய்து விட்டு சென்றனர்.

இதனால் முனீஸ்வரன் கோவில் டிரான்ஸ்பார்மரில் இருந்து ஆத்துமேடு செல்லும் மின் சப்ளை கடந்த சில நாட்களாக தடைபட்டுள்ளது இதனால் பத்துக்கு மேற்பட்ட விவசாயிகளின் மின் மோட்டார்கள் இயக்க முடியாத அவல நிலை நீடித்து வருகிறது. தற்போது குருவை சாகுபடிக்கு நாற்றங்கால் காப்பாற்ற தண்ணீர் தேவைப்படுகிறது எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு மின் கம்பத்தை மாற்றி மின் சப்ளை செய்ய கிராம மக்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். மின்கம்பத்தை மாற்றி அமைக்க வேண்டும் என மின்வாரிய துறையின் வாட்ஸ் அப் எண்ணில் விவசாயிகள் புகார் மனு அனுப்பியும் எந்த பயனும் இல்லை என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

# தமிழிசை வேந்தர் அருணாசலக்கவிராயருக்கு தில்லையாடியில் மணி மண்டபம் அமைக்க வேண்டும்

## அருணாசலக்கவிராயர் இயல், இசை, நாடக மன்ற வெள்ளி விழாவில் வலியுறுத்தல்

மயிலாடுதுறை, ஜுன்- 18:

தமிழிசை மூவருள் ஒருவரான தமிழிசைவேந்தர் அருணாசலக்கவிராயருக்கு அவர் பிறந்த ஊரான தில்லையாடியில் தமிழக அரசு சார்பில் மணி மண்டபம் அமைக்க வேண்டும் என தில்லையாடி அருணாசலக்கவிராயர் இயல், இசை, நாடக மன்ற வெள்ளி விழாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, தில்லையாடியில் உள்ள அருணாசலக்கவிராயர் இயல், இசை, நாடக மன்றத்தின் வெள்ளி விழா நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் அ.ரெங்கராஜ், பொதுநலச் சங்க முன்னாள் தலைவர் சா,ஜெகதீசன், பொருளாளர் ஜி.கே.துரையரசன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பொறையார் கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மன்ற நிறுவனர் நா.வீராசாமி, செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் விழாவை தொடங்கி வைத்தனர்.

ஊரட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் வீ.தமிழன்பன் வரவேறுப் பேசியது: தியாகத்தின் அடையாளமாக திகழும் தியாகி வள்ளியம்மை, தமிழிசையின் அடையாளமாக திகழும் அருணாசலக்கவிராயர். இவர்கள் இருவரும் இவ்வூரின் அடையாளமாக நிலைத்திருப்பது இங்கு வசிக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைத்தப் பெருமை. சீர்காழி அருணாசலக் கவிராயர் என்று பொதுவாக அழைக்கப்பட்ட நிலையைமாற்றி, தில்லையாடி அருணாசலக் கவிராயர் என்ற அடையாளத்தை மீட்டெடுத்தது இந்த மன்றம். அதை நிகழ்ச்சிகள் வாயிலாக ஒலிபரப்புச் செய்து லட்சக்கணக்கான நேயர்கள் மத்தியில் நிலை நிறுத்தி பெரும் பங்களிப்பைச் செய்தது காரைக்கால் அகில இந்திய வானொலியாகும். இவ்வூர் மக்கள் அருணாசலக்கவிராயரின் பங்களிப்பை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்த்து கொண்டாட வேண்டும் என்றார்.

மன்றத்தின் தலைவர் பாவலர் சு.ராசமாணிக்கம் தலைமை வகித்துப் பேசியது: தமிழிசை மூவருள் ஒருவரான அருணாசலக்கவிராயர் தில்லையாடியில் பிறந்திருந்தாலும், சில ஆண்டு காலம் சீர்காழியில் வாழ்ந்ததால், சீர்காழி அருணாசக்கவிராயர் என்றே அழைக்கப்பட்டு, அதுவே நிலை நிறுத்தப்பட்டது. அருணாசலக்கவிராயரின் புகழை, தமிழிசைப் பங்களிப்பை பரப்ப வேண்டும், அவர் தில்லையாடியில் பிறந்தவர் என்ற அடையாளத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளைக் கடந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. திருவையாறில் ஆண்டு தோறும் கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் பெயரில் தியாகராஜர் ஆரதனை விழா நடத்தப்படுவது போல, தில்லையாடியில் இந்த அமைப்பால் ஆண்டு தோறும் தமிழிசை விழா நடத்தப்பட்டது. இவ்வூரில் அருணாசலக் கவிராயருக்கு சிலை நிறுவப்பட்டுள்ளது. தியாகி வள்ளியம்மை நினைவு மண்டபத்துக்கு அருகில் அருண்சாசலக்கவிராயருக்கு மணி மண்டபம் அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். தொடர்ந்து பலரும் இக்கோரிக்கையை வலியுறுத்தினர்.

பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் மன்றத்தின் வெள்ளி விழா மலரை வெளியிட்டார். மயிலாடுதுறை எம்.பி. செ.ராமலிங்கம், முதன்மைக் கல்வி அலுவலக நேர்முக உதவியாளர், தமிழறிஞர் வீதி.முத்துக்கணியன் மற்றும் தமிழ்ச்சான்றோர்கள் பெற்றுக்கொண்டனர்.

நாதஸ்வர கலைஞர் திருமெய்ஞானம் டி.என். ராமநாதன், எழுத்தாளர் மாங்குடி கு.பாலசுந்தரி, காரைக்கால் சப்தஸ்வரம் முதியோர் இல்ல நிறுவனர் கே.கேசவசாமி ஆகியோருக்கு தஞ்சாவூர், தமிழ்ப் பலகலைக் கழக மெய்யியல் துறை தலைவர் கோ.க.நல்லசிவம் அருணாசலக்கவிரயார் இயல், இசை, நாடக மன்ற விருதினை வழங்கிப் பேசியது: தில்லையாடி மண்ணுக்கும், மக்களுக்கும் தியாகி வள்ளியம்மையாலும், அருணாசலக்கவிராயராலும் உலக அளவிலான அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழிசை மூவரான அருணாசாலக்கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை, முத்து தாண்டவர் ஆகியோர் தமிழிசைக்கு அடிப்படையாக விளங்கக் கூடிய கீர்த்தனைகளை இயற்றினர். பிற்காலத்தில் கர்நாடக இசை உள்ளிட்ட பல சங்கீத முறைகள் தோன்றுவதற்கு இவர்களின் தமிழிசை மூலங்களே காரணம். 16-ம் நூற்றாண்டுக்கு முன்னர் கர்நாடக இசைக்கென்று தனித்து வரலாறு கிடையாது.

ஆனால் தமிழிசைக்கு 2 ஆயிரம் ஆண்டுகால வரலாறு இருக்கிறது. நாம் தொலைத்து விட்டோம். அதனால் தேடிக்கொண்டே இருக்கிறோம். உலகிலுள்ள எந்த வகை இசை மரபுக்கும் அடிப்படையாக இருப்பது தமிழிசை என்பதை மறந்துவிடக் கூடாது. தமிழிசை மரபை மீட்டுருவாக்கம் செய்து உலகம் முழுவதும் கொண்டு சென்றது, இம்மண்ணுக்கு அருகில் உள்ள காரைக்கால் அம்மையார் என்பதை பெண்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். தருமபுரம் ஆதீனத்தின் தலைவராகும் வாய்ப்பைக் கூட தமிழுக்காக துறந்தவர் அருணாசலக்கவிராயர். இம்மண்ணைச் சேர்ந்தோர் இவரைப்பற்றி பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். தமிழிசையை கற்று, அடுத்த தலைமுறைக்கு தமிழிசையை கொண்டு செல்ல வேண்டும். திரை மோகத்திலிருந்து இந்த சமுதாயத்தை ஆரோக்கியமானதாக மாற்றுவோம் என்றார்.

ஏழிசை இசை ஆய்வக நிறுவனர் இராச.கலைவாணி, மன்னம்பந்தல் ஏவிசிகல்லூரி தமிழாய்வுத் துறை தலைவர் சு.தமிழ்வேலு, தருபபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரி உதவிப் பேராசிரியர் மு.ரா.தேவகி, பொறையார் உடற்கல்வி இயக்குநர் என். பிரபாகர், தியாகி வள்ளியம்மை அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் மு.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பேராசிரியர்கள், தமிழ்ச்சான்றோர்கள், தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளானோர் கலந்துகொண்டனர்.

வரிச்சிக்குடி எம்.விஜயகுமார் குழுவினரின் பரதநாட்டியம், இஞ்சிக்குடி டி.ஆர்.அன்பழகன் குழுவினரின் நாதஸ்வர இசை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை, நலிந்தோருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. முன்னதாக அருணாசலக் கவிராயர் சிலைக்கு எம்.எல்.ஏ உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். முடிவில் துணைத் தலைவர் ஏ.சி. ஆனந்தன் நன்றி கூறினார்.




PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# அம்பேத்கர், பெரியார், காமராஜரை தெரிந்துக்கொள்ளுங்கள்: நடிகர் அட்வைஸ்

# சென்னையில் கைதான பாஜக நிர்வாகி மதுரை சிறையில் அடைப்பு





# மருத்துவமனையிலேயே செந்தில்பாலாஜியை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி


| சென்னை / புதுக்கோட்டை | 18.06.2023 | varalaruu.com | பக்கம்:8 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

18.06.2023 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**ஜங் பகதூர் ராணா** , நேப்பாள மன்னர் (பி.1816) (இ.1877)



**கக்கன்** , தமிழக அரசியல்வாதி (பி.1908) (இ.1981)




**சின்ன அண்ணாமலை** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், அரசியல்வாதி (பி.1920) (இ.1980)



**ஹரிலால் காந்தி** , இந்திய அரசியல்வாதி, மகாத்மா காந்தியின் மூத்த மகன் (பி.1948) (இ.1988)



## இன்றைய நினைவு நாள்

**ணி லட்சுமிபாய்** , (ஜான்சிராணி), இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை (பி.1835) (இ.1858)



**ன்ன அண்ணாமலை** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், அரசியல்வாதி (பி.1920) (இ.1980)



**மில்கா சிங்** , இந்தியத் தடகள விளையாட்டு வீரர் (பி.1929) (இ.2021)

